කෘෂිකර්ම අමාත්‍යාංශය
கமத்தொழில் அமைச்சு
Ministry of Agriculture

"ගොවිජන මන්දිරය", 80/5, රජමල්වත්ත පටුමග, බත්තරමුල්ල.
"கொவிஜன மந்திரய", 80/5, ராஜமல்வத்தை வீதி, பத்தரமுல்லை.
"Govijana Mandiraya", 80/5, Rajamalwatte Avenue, Battaramulla, Sri Lanka.

| | | |
|---|---|---|
| මගේ අංකය / எனது இல. / My No. — NFS/FCG (2) 2016-OFC | ඔබේ අංකය / உமது இல. / Your No. | දිනය / திகதி / Date — 2016.08.15 |

## வரவு செலவு முன்மொழிவுகளை அமுல் செய்தல்
## மறுவயற் பயிர்களைச் செய்கைபண்ணுவதற்கு உரங்களைக் கொள்வனவு செய்ய உர நிவாரணப் பணத்தை வழங்கல் - 2016

1. **நிவாரணக் கொள்கை**

1.1 "கிழங்கு, வெங்காயம், மிளகாய், சோயா, சோளம்" ஆகிய பயிர்களைச் செய்கைபண்ணும் விவசாயிகளிற்கு மாத்திரம் இந்த உர நிவாரணம் உரித்தானதாகும்.

1.2 உச்ச அளவாக ஒரு ஹெக்டயரிற்கு கீழ் வருடமொன்றிற்கு ரூபா 10,000/- உச்ச அளவான தொகையாக ஒரு விவசாயிக்கு உரித்துடையதாகும் (காணியின் விஸ்தீரணத்திற்கமைய உரித்தான நிவாரணத் தொகையின் அளவு 1வது இணைப்பில் தரப்பட்டுள்ளது).

1.3 2016 உர நிவாரணத்தைப் பெற்ற நெல்லைப் பயிரிடும் விவசாயிகள் அல்லது தேயிலை, தென்னை, இறப்பர் ஆகியவற்றைப் பயிரிடும் விவசாயிகளிற்கு இந்த நிவாரணம் வழங்கப்பட மாட்டாது.

1.4 மறுவயற் பயிர்களிற்கு நிவாரணம் வருடத்திற்கு ஒரு தடவை மாத்திரமே வழங்கப்படுவதால் சிறுபோகத்தில் மேற்குறிப்பிட்டப் பயிர்களைச் செய்கைபண்ணிய விவசாயிகள். காலபோகத்தில் அல்லது இடைப்போகத்தில் பயிற்செய்கையை ஆரம்பித்துள்ள விவசாயிகளை மாத்திரம் தெரிவு செய்து சிபாரிசினை / அனுமதியை வழங்க வேண்டும்.

1.5 நிவாரணத்தைப் பெற்றுக்கொள்வதற்கு விவசாயிகளின் பயிற்செய்கை நிலமானது, கமநல அபிவிருத்தி அலுவலரினால் கிராம அலுவலர் பிரிவுகளிற்கமைய பதிவு செய்யப்பட்டிருத்தல் கட்டாயமானதாகும். அவ்வாறு பதிவு செய்யப்பட்டப் பதிவேட்டின் பிரதியை நிவாரணத்தைப் பெற்றுக் கொள்வதை இலகுவாக்குவதற்காக வி.ஆ.உ.உ (ARPA), கிராம அலுவலரின் அலுவலகங்களில் காட்சிக்கு வைத்திருக்க வேண்டும்.

1.6 மஹாவலி வலய காணிகள் தொடர்பில் மஹாவலி அலகின் முகாமையாளரின் பொறுப்பிலுள்ள காணிகளை இனங்காண்பதற்கான பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்கத்தை இதற்குப் பயன்படுத்த வேண்டும்

2. **நிவாரணத்தைப் பெற்றுக் கொள்ள விண்ணப்பித்தலும், சிபாரிசு செய்தலும்**

2.1 வயற் பயிர்களைச் (கிழங்கு, வெங்காயம், மிளகாய், சோயா, சோளம்) செய்கைபண்ணும் விவசாயிகள் விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளரின் அல்லது கிராம அலுவலர் அல்லது மஹாவலி அலகின் முகாமையாளரினால் வழங்கப்படும் விண்ணப்பப் படிவத்தில் மூலம் மாத்திரமே நிவாரணத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும். உர நிவாரணத்திற்கு உரித்துடையவர் என்பதை உறுதிசெய்து கொள்வதுடன் சம்பந்தப்பட்ட விவசாயியின்